திரு. சோ. கருணாநாதன் : தலைவரவர்களே, தேர்ந்தெடுக்கப் பட்டப் பகுதிகளைப் பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். மொத்தம் எத்தனை ஏக்கர் இந்தத் திட்டத்தில் அடங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஒவ்வொரு ஆலைப் பகுதியிலும் 4,000 ஏக்கர் வீதத்தில் கரும்பு முனைப் புத் திட்டத்தின் கீழ் பயிராகும் மொத்தப் பரப்பளவு 32,000 ஏக்கராகும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்தத் தீவிர கரும்பு சாகுபடித் திட்டத்தின்கீழ் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் பிற மாநிலங்களில் கரும் புக்கு அதிக விலை கொடுக்கப்படுகிறது. நமது மாநிலத்தில் பிற மாநிலங்களைவிட குறைவாகக் கொடுக்கப்படுகிறது. எனவே, நம் மாநிலத்திலும் கரும்பின் விலையை அதிகரிக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இன் னும் அது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

நவ்லாக் வேளாண்மைப் பண்ணை

*385 **வினா—திரு. கே. ஏ. வகாப்** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை அருகில் உள்ள நவ்லாக் விவசாயப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) நவ்லாக் விவசாயப் பண்ணையில் முதன்மையான விதைகள் பயிரிட பண்ணையை விரிவு படுத்துவதற்காக மேலும் 524.16 ஏக்கரா நிலம் தமிழ் நாடு இயங்கா உடைமைகளைக் கேட்டுப் பெறு தல்—கையகப்படுத்தல் சட்டத்தின் கீழ் கைப்பற்றும்படி ஆணை யிடப்பட்டுள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, அந்த இடம் ஒரு தனியா ரிடம் இருப்பதால், அதைப் பெறுவதில் சிரமம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுபோல் இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருப்பதால், அவற்றை விவசாயத்திற்கு எடுத்துக் கொள்ளவும், நவ்லாக் விவசாயப் பண்ணையில் ஒரு ஆராய்ச்சிக் கல்லூரியை ஏற்படுத்தவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இன்னும் இடமே கையகப்படுத்தப்படவில்லை. அதற்குள் மற்றவர்களைப் பற்றிச் இப்போது சொல்வது அவசியமில்லாதது. இருந்தாலும் தனியா ருக்குச் சொந்தமான நிலத்தை எடுத்துக்கொள்ள ஆணை பிறப்

பித்தபோது, அவர்கள் அதை எதிர்த்து வழக்குப் போட்டிருக்கிறார்கள். வழக்கில் இருந்தாலும் மீண்டும் அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு வருவாய் அதிகாரிக்கு தக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, நவ்லாக் விவசாயப் பண்ணையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு இருப்பதாகச் சொன்னார்கள். ஒரு காலத்திலே அந்த இடம் ஒன்பது லட்சம் பழ மரங்களைக் கொண்ட ஒரு பெரிய பழத்தோட்டமாக இருந்ததாகச் சொல்கிறார்கள். அந்த வழியாகச் செல்கிறவர்கள் ஒரு அணா கொடுத்தால் எவ்வளவு பழம் வேண்டுமானாலும் சாப்பிட்டுக் கொள்ளக்கூடிய நிலைமை இருந்தது என்று சொல்லப்படுகிறது. ஆகவே நவ்லாக் பண்ணையில் ஒரு பழத் தோட்டம் அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நானே அந்தப் பண்ணையை நேரில் சென்று பார்த்தேன். அங்கு பழ மரங்கள் எதுவும் இல்லை. அது பழங்கதையாக இருப்பதால், புதுக் கதையைப் பற்றி யோசிப்போம்.

Examinations for All India Services

* 386 *Q.*—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to set up a training centre in this State, to assist the members of the Backward Classes sitting for the All India Examinations; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) அனைத்திந்தியப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்காக, பின்தங்கிய வகுப்பினர்களிலிருந்து 50 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க சென்னையில் சிறப்புப் பயிற்சி நிறுவனம் ஒன்று நிறுவப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, அப்படி நிறுவப்பட்ட இந்தத் திட்டத்தின்கீழ் மாவட்ட வாரியாகப் பின்தங்கிய மாணவர்களைச் சேர்க்க உத்தரவிடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்தத் தேர்வுக்குப் பயிற்சி பெறுவதற்காக இதுவரையில் குறைவாகவே விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. ஆகவே, மாவட்டவாரியாகப் பிரித்து, மாணவர்களைச் சேர்க்கவேண்டுமென்ற நிலை எழவில்லை. 50 பேர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டியதற்கு இதுவரையில் 13 பேர் தான் விண்ணப்பங்களை அனுப்பியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.